ශ්‍රී ලංකා ජාතික ක්‍රිස්තියානි මණ්ඩලය
இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம்
National Christian Council of Sri Lanka

**எதிர்வரும் பொதுத் தேர்தல் குறித்த**
**இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் அறிக்கை**

ஒரு நாடாக அதன் மக்கள் ‘முன்னோக்கிச் செல்லும் பாதையை’ தீர்மானிக்க எதிர்பார்த்திருக்கின்ற நிலையில், 2020 ஆகஸ்ட் மாதம் 05ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுடன் எமது நாடு அதன் வரலாற்றில் மீண்டும் ஒரு தீர்மானமிக்க காலகட்டத்திற்குள் நுழையவிருக்கிறது.

இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றமானது குடிமக்களின் வாக்களிக்கும் உரிமையை ஏற்றுக்கொள்வதோடு, அனைத்து வாக்காளர்களும் தமது உரிமையை, உரிய சிந்தையுடனும் பொறுப்புணர்வுடனும் பயன்படுத்துமாறு அழைப்பு விடுக்கிறது.

- தெரிவுசெய்யப்படுகின்ற நபர்கள், அனைத்து மக்களும் மதிப்புடனும் சமத்துவமாகவும் வாழ்வதற்கு அவர்களின் உரிமைகளையும் அபிலாஷைகளையும் பாதுகாக்கும் பொறுப்புமிக்க நிர்வாகத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். மேலும் எமது நாட்டின் பல்லின, பல்சமய தன்மையை கருத்திற்கொண்டு அரசியல் தலைமைத்துவமானது யதார்த்தத்தை முழுமையாக அறிந்திருக்க வேண்டும் என்பதுடன் பாகுபாடின்றி பன்முகப்படுத்தப்பட்ட சகவாழ்வின் மதிப்பினை நிலைநிறுத்துவதற்கு பொறுப்புமிக்க நடவடிக்கையில் ஈடுபடுவதும் அவசியமாகும்.

- எந்தவொரு நாட்டிற்கும் வாழ்வை வளப்படுத்தவும் மேம்படுத்தவும், சுற்றுச்சூழல் மற்றும் நிலம் என்பவை அதன் அடிப்படை வளங்களாகும். ஆகவே பொறுப்புமிக்க குடிமக்களாக நாம், சூழலையும் வாழ்வையும் பாதுகாக்கும், மக்களின் நலனில் அக்கறை கொண்டு நிலத்தின் உரிய முறையிலான பயன்பாட்டை தொடர்ந்தும் பேணுகின்ற ஒரு தலைமைத்துவத்தை நாட வேண்டும்.

- சட்ட மன்றம், நீதித்துறை மற்றும் நிறைவேற்று அதிகாரத்திலுள்ள அதிகாரங்களை பிரித்தலானது ஒரு துடிப்பான ஜனநாயகம் மற்றும் சட்ட ஆட்சிக்கு அவசியமான முன்னேற்பாடாகும். தகுதியுள்ள வாக்காளர்களாக இம் முக்கிய அரலசியலமைப்பு கொள்கைகள் ஊக்குவிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்படுவதற்கு மாறாக இணக்கம் செய்யப்படவில்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

- 2015 இல் ஏற்பட்ட அரசியல் பிளவோடு பாராளுமன்ற உறுப்பினர்களின் பெரும் ஆதரவோடு ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியலமைப்பின் 19வது திருத்தமானது, நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகப்படியான அதிகாரங்களைக் குறைக்கவும் சட்ட மன்றத்தின் அதிகாரங்களை வலுப்படுத்தவும் முக்கியமான சுயாதீன ஆணையங்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது என்பதை நாம் கவனத்தில் கொண்டுள்ளோம். மேலும் தகவல் உரிமையானது அண்மைக்காலத்தில் பொதுப் பொறுப்புணர்வை ஊக்குவித்து குடிமக்களுக்கு அதிகாரமளித்துள்ளது.

- தற்போது நிலவும் தொற்றுநோய் சூழலைக் கருத்தில் கொண்டு, கொடிய வைரஸின் பாதிப்பை எதிர்த்துப் போராட சுகாதார வழிமுறைகளை கடைப்பிடிப்பதில் விழிப்பாயிருக்குமாறு, தங்கள் வாக்களிக்கும் உரிமையை பயன்படுத்தவிருக்கும் அனைத்து வாக்காளர்களுக்கும் நாம் அழைப்பு விடுக்கிறோம். இவ்வாறானதொரு சவால் நிறைந்த சூழலில் ஒரு சுதந்திரமான, நியாயமான தேர்தலை நடாத்துமாறு

#368/6, Bauddhaloka Mawatha, Colombo 7, Sri Lanka.
Telephone: +94 (11) 2671723 Fax: +94 (11) 2671721
E-Mail: info@nccsl.org | Website: www.nccsl.org

தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு நாம் பரிந்துரை செய்கிறோம். மேலும் அதன் உறுப்பினர்களுக்காகவும் அவர்களின் பணிகளுக்காகவும் நாம் மன்றாடுகின்றோம்.

இத்தேர்தலானது அமைதியான முறையிலும், ஒரு பொறுப்புள்ள பாராளுமன்றத்தை தெரிவுசெய்வதற்கு வாக்காளரை ஞானத்தோடு செயற்பட வழிவகுக்கும் தேர்தலாகவும் அமைய வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பும் பிரார்த்தனையுமாகும்.

**கையொப்பமிட்டோர்:**

**அங்கத்துவ திருச்சபைகள்**

- அருட்திரு. ஹேஷான் டி சில்வா- தலைவர்- இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம் மற்றும் இலங்கை பெப்டிஸ்ட் சங்கம்
- பேராயர் அதிவண.டிலோராஜ் ஆர். கனகசபை, இலங்கைத் திருச்சபை, கொழும்பு மறைமாவட்டம்
- பேராயர் கீர்த்திசிறி பெர்னான்டோ, இலங்கைத் திருச்சபை, குருநாகலை மறை மாவட்டம்
- பேராயர் அதிவண. அறிவர். டேனியல். எஸ். தியாகராஜா- யாழ் மறைமாவட்ட பேராயர், தென்னிந்திய திருச்சபை
- அருட்திரு.சமன் பெரேரா- தலைவர், இலங்கை பிரஸ்பட்டேரியன் திருச்சபை
- அருட்திரு. ஆசிறி. பி. பெரேரா- தலைவர்/ பேராயர், இலங்கை மெதடிஸ்த திருச்சபை
- அருட்திரு. சர்லி பேபர்- தலைவர், கிறிஸ்தவ சீர்திருத்த திருச்சபை
- ஆணையாளர் சுரேஷ் பவர் - பிராந்திய தளபதி, இரட்சண்ய சேனை
- அருட்திரு.மெக்ஸ்வெல் டொஸ் - பொதுச் செயலாளர், இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம்

**அங்கத்துவ ஒருமைப்பாட்டு அமைப்புக்கள்:**

- இளம் ஆடவர் கிறிஸ்தவ அமைப்பு (YMCA)
- இளம் பெண்கள் கிறிஸ்தவ அமைப்பு (YWCA)
- கிறிஸ்தவ மாணவர் ஒன்றியம் (SCM)
- இலங்கை வேதாகம சங்கம்
- கிறிஸ்தவ இலக்கிய சங்கம்
- இலங்கை இறையியல் கல்லூரி
- சத்திய வசனம்

**உப அங்கத்துவ திருச்சபைகள் மற்றும் ஒருமைப்பாட்டு அமைப்புக்கள்**

- அருட்திரு. ஜி. நடராஜா- தலைவர், இலங்கை லூத்தரன் திருச்சபை
- அருட்திரு.மைக்கல் திசாநாயக்க- தலைவர், மக்கள் தேவ சபை, இலங்கை
- அருட்திரு.லெஸ்லி கீகல்- தலைவர்- நாற்சதுர சுவிசேஷ திருச்சபை, இலங்கை
- அருட்திரு.தே. தேவநேசன்- தலைவர், இலங்கை அமெரிக்க மிஷன் திருச்சபை
- கொழும்பு இறையியல் கல்லூரி
- கிறிஸ்துவுக்கான இளைஞர் அமைப்பு